# இந்தியா மற்றும் அதன் மாநிலங்கள்/மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஹஜ் கமிட்டியின் பிரிவுகளின் செயல்பாடுகளை உயர்மட்டக்குழு ஆய்வு செய்கிறது

இந்திய ஹஜ் கமிட்டி மற்றும் மாநில மந்றும் யூனியம் பிரதேசங்களில் உள்ள அதன் பிரிவுகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்ய இந்திய அரசு உயர்மட்ட அதிகாரம் கொண்ட குழுவை (எச்.பி.சி.) அமைத்துள்ளது. இந்த கமிட்டிகள் தங்கள் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் தெரிவிக்கும் யோசனைகளையும் குறைபாடுகளையும் பரிசீலித்து இந்த குழு நடவடிக்கை எடுக்கும். பொது நல வழக்கு ஒன்றின் மீது மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் காரணமாக இந்த உயர்மட்ட அதிகாரம் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

நான்கு உறுப்பினர்கள் கொண்ட இந்த உயர்மட்டக் குழுவிற்கு ஒடிசா மாநில முன்னாள் தலைமை நீதிபதி, நீதியரசர் (ஓய்வு) பிலால் நாஜாகி தலைமை தாங்குகிறார். சவுதி அரேபியாவிற்கான முன்னாள் இந்திய தூதர் இஷ்ராத் அஜீஸ், பம்பாய் மெர்க்கன்ட்டைல் கூட்டுறவு வங்கயின் இயக்குநர் திரு மெஹ்மூத் ரஹ்மான் ஆகியோர் இந்த குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்த உயர்மட்ட அதிகாரம் கொண்ட குழுவின் ஆய்வு எல்லையாக 1) இந்தியா மற்றும் அதன் மாநிலங்கள்/மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஹஜ் கமிட்டியின் பிரிவுகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்தல் 2) இந்த கமிட்டிகள் தங்கள் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் தெரிவிக்கும் யோசனைகளையும் குறைபாடுகளையும் பரிசீலித்தல். இந்த உயர்மட்ட அதிகாரக்குழு தனது பணியை மேற்கொண்டு 10 மாதகாலத்தில் தனது அறிக்கையை தாக்கல் செய்யும்.

இந்த உயர்மட்ட அதிகாரம் கொண்ட குழுவை வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் 2013 அக்டோபர் 9ந்தேதி வரவேற்றார். இந்த குழுவிற்கு இந்திய அரசு காட்டிவரும் முக்கியத்துவத்தை அவர் விளக்கினார். திரு சல்மான் குர்ஷித் அவர்களின் விளக்கத்திற்கு பின் இந்த உயர்மட்ட அதிகாரம் கொண்ட குழு வெளியுறவுத்துறை அதிகாரிகளையும், இந்திய ஹஜ் கமிட்டி

தலைவரையும் சந்தித்து தனது செயல்திட்டம் குறித்தும், இப்பணியை விரைவாக செய்து முடிக்க திட்டம் தயாரிப்பது தொடர்பாகவும் விவாதித்தது.

இந்த உயர்மட்ட அதிகாரம் கொண்ட குழு இந்திய ஹஜ் கமிட்டியின் மற்றும் மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள அதன் பிரிவுகளின் செயல்பாடுகளில் மேம்பாட்டினை ஏற்படுத்தி அதன் மூலம் ஹஜ் புனிதப் பயணம் திறனுடனும் தடையின்றியும் செயல்பட ஆலோசனைகளையும் யோசனைகளையும் தெரிவிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளது. இந்த ஆலோசனைகளும் யோசனைகளும் dirgulf@mea.gov.in அல்லது dirhaj@mea.gov.in என்ற இமெயில் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**புதுதில்லி**
**அக்டோபர் 10, 2013**